இந்திய உச்சநீதிமன்றம்

டிசம்பர் 14, 2021

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். சுபாஷ் ரெட்டி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சீவ் கன்னா

உரிமையியல் மேல்முறையீடு எண் 7706/2021

ஏபிஎம்சி யஷ்வந்தபுரா அதன் செயலாளர் மூலம்

எதிர்

திருவாளர்கள் செல்வா ்புட்ஸ் அதன் நிர்வாக பங்குதாரர் மூலம்

கர்நாடக வேளாண் விளைப்பொருள் சந்தைப்படுத்தல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் 1966: பிரிவு 65 - எதிர்மேல்முறையீட்டாளர் கர்நாடக மாநிலத்திற்கு வெளியே மசாலாப் பொருட்களை வாங்கி, அதை இறக்குமதி செய்து, பின் பதப்படுத்தப்பட்ட சரக்குகளை மேல்முறையீட்டாளர் -குழுமத்தின் சந்தை பகுதிகளில் விற்பனை செய்தார் - எதிர்மேல்முறையீட்டாளர் மீது சந்தை கட்டணம் விதிக்கப்பட்டது - சரித்தன்மை - தீர்முடிவு: சட்டத்தின் பிரிவு 65(2)ஐ அதன் விலக்கக்கூறு மற்றும் அதன் விளக்கம் மற்றும் உட்கூறு (2-A) (ia)உடன் சேர்த்து வாசிக்கும்பொழுது, எந்த கொள்முதலாளரும் வேளாண்

விளைப்பொருட்களை பதப்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் கர்நாடக மாநிலத்திற்குள் உள்ள சந்தை பகுதிகளுக்கு வெளியிலிருந்து இறக்குமதி செய்தால், சந்தை கட்டணத்திற்கு விலக்களிக்கும் சட்டத்தின் பிரிவு 65 இன் உட்பிரிவின் இரண்டாவது விலக்கக்கூறின் பொருந்தும் தன்மை விலக்கப்படுகிறது - கர்நாடக மாநிலத்திற்கு வெளியே இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பதப்படுத்தப்பட்ட வேளாண் விளைப்பொருட்கள் கூட, மேல்முறையீட்டாளர் - குழுமத்தின் சந்தை பகுதியில் விற்பதற்கு சந்தை கட்டணம் செலுத்தவேண்டும் என்பதை சட்டத்தின் பிரிவு 65 இன் உட்பிரிவு (2)இன் விளக்கம் தெளிவுபடுத்துகிறது - அதேபோல், சந்தை கட்டணத்தை வாங்குபவரிடம் இருந்து பெற்று, அதை சந்தை குழுமத்திற்கு செலுத்த வேண்டிய கடமை இறக்குமதியாளருக்கு உள்ளது என்பதும் அந்த பிரிவில் இருந்து தெளிவாகிறது - சந்தை பகுதியில் செய்யப்படும் விற்பனையே சந்தை கட்டணம் விதிக்கப்படுவதன் காரணமாகிறதே தவிர சந்தை பகுதிக்கு வெளியே செய்யப்படும் முதல் கொள்முதல் அல்ல - குறிப்பாக விற்பனை செய்யப்படும் பொருட்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்கள் ஆகும் - சந்தை கட்டணம் கட்டுவதிலிருந்து விலக்களிக்கப்பட எதிர்மேல்முறையீட்டாளருக்கு உரிமையில்லை.

இந்த மேல்முறையீட்டை அனுமதித்த இந்நீதிமன்றத்தின்

தீர்முடிவு: சட்டத்தின் வகையங்களில் வரையறுக்கப்பட்டுள்ளபடி எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு வணிகர் ஆவர், வேளாண் விளைப்பொருட்களாக அறிவிக்கப்பட்ட மசாலாப் பொருட்களை கர்நாடக மாநிலத்திற்குள் உள்ள சந்தை பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், கர்நாடக மாநிலத்திற்கு வெளியேயும் அவர் வாங்கியுள்ளார். இத்தகைய இறக்குமதியைத் தொடர்ந்து, அவர்கள் பொருட்களை பதப்படுத்தி, பதப்படுத்தப்பட்ட

பொருட்களை சந்தை பகுதியில் விற்பனை செய்கிறார்கள். அந்த பதப்படுத்தப்பட்ட பொருட்கள் கூட சட்டத்தின் கீழான அட்டவணையின்படி அறிவிக்கப்பட்ட பொருட்களாகும்.

12. சட்டத்தின் பிரிவு 65, சந்தை குழுமம் சந்தைப் பகுதியில் வாங்குநரால் கொண்டுவரப்படும் வேளாண் விளைப்பொருளுக்கு துணை விதிகளில் சொல்லப்பட்டுள்ள விகிதங்களில், வாங்குநரிடம் சந்தை கட்டணங்கள் விதித்து வசூலிக்கப்படலாம் என்று கூறுகிறது. சட்டப் பிரிவு 65 (2) இன் இரண்டாவது விலக்கக்கூறின்படி, எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும் மாநிலத்திற்குள் எந்தவொரு சந்தை பகுதியிலும், துணைப்பிரிவு (2) இன் கீழ் சந்தை கட்டணம் ஏற்கனவே விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டால் அத்தகைய வேளாண் விளைப்பொருள் மாநிலத்திற்குள் வேறு எந்த சந்தை பகுதியிலும் பதப்படுத்தப்பட்டு விற்கப்படும்பொழுது அல்லது மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்படும் பொழுது, அதற்கு சந்தை கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படும். எவ்வாறாயினும், விளக்கத்தை வாசிப்பதன் மூலம், இரண்டாவது விளக்கக்கூறின் பொருந்தக்கூடிய தன்மை மாநிலத்திற்கு வெளியே இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, மாநிலத்திற்குள் எந்தவொரு சந்தை பகுதியிலும் விற்பனை செய்யப்படும் எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும்; சுய நுகர்வுக்காக தவிர, பதப்படுத்துதல் அல்லது உற்பத்திக்காக, மாநிலத்திற்கு வெளியில் இருந்து மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு சந்தைப் பகுதியிலும், தனது சொந்த கணக்கில் அல்லது மற்றொரு நபரின் முகவராக, எந்தவொரு நபரும் இறக்குமதி செய்யும் அல்லது இறக்குமதி செய்ய வைக்கும் எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும் விலக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. மேலும், பிரிவு (2-A)(ia) ன் படி, விளைப்பொருள் ஒரு இறக்குமதியாளரிடமிருந்து கொள்முதல் செய்பவருக்கு விற்கப்பட்டால் இறக்குமதியாளர் சந்தை கட்டணத்தை கொள்முதல் செய்பவரிடமிருந்து பெற்று, அதே தொகையை குழுமத்திற்கு செலுத்த

கடப்பாடுடையவராகிறார். சட்டத்தின் பிரிவு 65(2), அதன் இரண்டாம் விலக்கக்கூறு, அதன் விளக்கம் மற்றும் கூறு (2-A)(ia) ஆகியவற்றை சேர்த்து வாசிக்கும் போது, ஏதேனும் ஒரு வணிகர் வேளாண் விளைப்பொருளை பதப்படுத்தும் மற்றும் விற்பனை செய்யும் பொருட்டு மாநிலத்திற்கு வெளியிலிருந்து கர்நாடக மாநிலத்தின் சந்தை பகுதிக்குள் இறக்குமதி செய்தால், சட்டத்தின் பிரிவு 65 இன் உட்பிரிவு (2)இன் இரண்டாம் விலக்கக்கூறின் பொருந்தும் தன்மை விலக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் பிரிவு 65-இன் உட்பிரிவு (2) இன் விளக்கம், கர்நாடக மாநிலத்திற்கு வெளியே இருந்து இறக்குமதி செய்யப்படும் வேளாண் உற்பத்தியில் இருந்து பதப்படுத்தப்பட்ட பொருட்கள் கூட, மேல்முறையீட்டாளர் - சந்தை குழுமத்தின் சந்தை பகுதியில் விற்பனை செய்வதற்கு சந்தை கட்டணத்தை ஈர்க்கின்றன என்பதை தெளிவுபடுத்துகிறது. மேற்சொன்ன பிரிவிலிருந்து, கொள்முதல் செய்பவரிடமிருந்து சந்தைக் கட்டணத்தை வசூலித்து அதை சந்தை குழுமத்திடம் செலுத்துவது இறக்குமதியாளருடைய கடப்பாடு என்பதும் தெளிவாகிறது.

3. இது இறக்குமதி செய்யப்பட்ட வேளாண் விளைப்பொருட்களை, மேல்முறையீட்டாளரின் சந்தை பகுதியில், பதப்படுத்திய பின் விற்பனை செய்ய மறுத்ததை பற்றிய வழக்கல்ல. இந்த வழக்கை பொறுத்தவரை சந்தை கட்டணங்களை செலுத்துவதில் இருந்து விலக்கு பெற அதற்கு உரிமை இல்லை. அதே சமயம் ஒருவர், அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்களை சுத்தம் செய்யும் மற்றும் பதப்படுத்தும் பொருட்டு மாநிலத்திற்கு வெளியே இருந்து இறக்குமதி செய்து, அந்த பதப்படுத்தப்பட்ட விளைப்பொருட்களை சந்தை பகுதிக்குள் விற்பனை செய்யாமலிருந்தால், அவர் சந்தை கட்டணம் செலுத்த கடமைப்பட்டவர் அல்ல. இந்த வழக்கை பொறுத்தவரை, இறக்குமதி செய்த பிறகு அதை விற்பனை செய்த பொருண்மையை எதிர்க்காமல், வேளாண் விளைப்பொருட்கள்

பதப்படுத்தப்பட்டுவிட்டால், அது சந்தை கட்டணத்திற்கு உட்படாது என்ற அடிப்படையில் மட்டும் எதிர்மேல்முறையீட்டாளர் வழக்கை எதிர்த்தார், அதை ஒப்புக்கொள்ள முடியாது. சந்தை பகுதிகளுக்குள் செய்யப்படும் விற்பனை தான் சந்தை கட்டணம் விதிக்கப்படுவதற்கு காரணமாகிறதே தவிர, சந்தை பகுதிக்கு வெளியே செய்யப்படும் முதல் கொள்முதல் அல்ல. விற்பனை செய்யப்படும் சரக்குகளும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்கள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. அட்டவணையின் கீழ் உள்ள வகையின் செல்லுபடியாகும் தன்மை எதிர்ப்புக்கு உட்பட்டதல்ல.

ஜி.கிரிதர் பிரபு மற்றும் பலர் எதிர் வேளாண் உற்பத்தி சந்தைக் குழுமம் (2001) 3 எஸ்.சி.சி 405: [2001] 2 எஸ்.சி.ஆர். 329; குஜராத் அம்புஜா எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் உத்தரகண்ட் மாநிலம் மற்றும் பிறர் (2016) 3 எஸ்.சி.சி 601: [2015] 12 எஸ்.சி.ஆர். 304; ஐடிசி லிமிடெட் எதிர் கர்நாடக மாநிலம் மற்றும் பிறர் 2005 எஸ்.சி.சி ஆன்லைன் கர் 86: 2005 எ.ஐ.எச்.சி 2950 குறிப்பிடப்படுகிறது.

பார்வையிடப்பட்ட தீர்ப்புகள்

[2001] 2 எஸ்சிஆர் 329	குறிப்பிடப்படுகிறது	பத்தி 9, 13
[2015] 12 எஸ்சிஆர் 304	குறிப்பிடப்படுகிறது	பத்தி 10, 14

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: உரிமையியல் மேல்முறையீட்டு எண் 7706/2021.

பெங்களூரில் உள்ள கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நீ.பே.ம எண் 18000/2011 இல் பிறப்பிக்கப்பட்ட 11.01.2013 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கு எதிராக வழங்கப்பட்டது.

மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்: முனைவர் நந்த கிஷோர்

எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர்கள்: ஹாரிஸ் பீரன், முஷ்டாக் சலீம், உஸ்மான் கனி கான், அசார் அஸீஸ், ஆனந்த் பி. மேனன், ராதா ஷியாம் ஜேனா

தீர்ப்புரை

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.சுபாஷ் ரெட்டி அவர்களால் பிறப்பிக்கப்பட்டது.

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. இந்த மேல்முறையீடானது, கற்றறிந்த தனி நீதிபதியால் நீ.பே.ம எண் 11816/2009 என்ற வழக்கை 22.08.2011 அன்று அனுமதித்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த நீ.பே.மே. எண் 18000/2011 இல் கற்றறிந்த தனி நீதிபதி வழங்கிய உத்தரவை உறுதி செய்தும், மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டை தள்ளுபடி செய்தும் பிறப்பிக்கப்பட்ட 11.01.2013 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளரின் சந்தை பகுதியில் தி/ள். செல்வா ஃபுட்ஸ் என்ற பெயரில் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் பதப்படுத்தப்பட்ட மசாலாப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரி ஆவார். அவர்கள் கர்நாடக மாநிலத்திற்குள் உள்ள வேளாண் சந்தை குழுமங்களின் பல்வேறு சந்தை பகுதிகளிலிருந்து மஞ்சள், மிளகாய், மல்லி, வெந்தயம் மற்றும் கடுகு விதைகள் முதலிய மசாலா பொருட்களை வாங்குகின்றனர், மேலும் மாநிலத்திற்கு வெளியிலிருந்தும் இறக்குமதி செய்கின்றனர். அத்தகைய வேளாண் விளைப்பொருட்களை இறக்குமதி செய்த பின்னர், அந்த மசாலா பொருட்களை சுத்திகரித்து, பதப்படுத்தி, பதப்படுத்தப்பட்ட பொருட்களை மேல்முறையீட்டாளரின் சந்தை பகுதிக்குள் விற்கின்றனர். 2008 ஆம் ஆண்டில், சந்தை குழுமத்தின் அதிகாரிகள் எதிர்மேல்முறையீட்டாளரின் கோப்புகளை ஆய்வு செய்து, எதிர்மேல்முறையீட்டாளர் வெந்தயம், கடுகு விதைகள் ஆகியவற்றை கர்நாடக மாநிலத்திற்கு வெளியிலிருந்து கொள்முதல் செய்து, அதை இறக்குமதி செய்த பின்னர் பதப்படுத்தப்பட்ட சரக்குகளை மேல்முறையீட்டாளரின் சந்தை பகுதிக்குள் விற்றாதாகவும், சந்தை கட்டணம் செலுத்தவில்லை எனவும் கண்டறிந்தனர். முதல் நேர்வில் மேல்முறையீட்டாளர்-ஏபிஎம்சி, எதிர்மேல்முறையீட்டாளர் ரூ.28,422/- என்ற சந்தை கட்டணத்தையும், அபராத தொகையையும் செலுத்த தவறியுள்ளார் என்பதன் அடிப்படையில், 12.08.2008 தேதியிட்ட உத்தரவு மூலம், அவரது உரிமத்தை ரத்து செய்தது. இந்த உத்தரவு, நீதிப்பேராணை மனு எண் 11211/2008 என்ற மனு மூலம் கேள்விக்குட்படுத்தப்பட்டபோது, எதிர்மேல்முறையீட்டாளருக்கு முறையான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றம் இந்த நீதிப்பேராணை மனுவை அனுமதித்து, மறு பரிசீலனைக்காக மேல்முறையீட்டாளருக்கு வழக்கை மீண்டும் திருப்பி அனுப்பியுள்ளது. மேலும், இடைக்கால உத்தரவின்படி செலுத்தப்பட்ட தொகையான ரூ. 28,422/-, அதிகாரிகளின் முடிவிற்கு உட்பட்டது என்று அவதானிக்கப்பட்டது.

5. வாய்ப்பு வழங்கப்பட்ட பின்னர், முந்தைய கேட்புத் தொகையை உறுதி செய்தும் கேட்புத் தொகையான ரூ. 1,13,688 இலிருந்து ரூ.85, 266 செலுத்தவும் 24.032009 தேதியிட்ட உத்தரவு பிறப்பித்தது. அதே கோரிக்கையை கேள்விக்குள்ளாக்கி, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீ.பே.ம. 11816/2009 உயர்நீதிமன்றத்தின் தனி நீதிபதியால் அனுமதிக்கப்பட்டது, அதை எதிர்த்து மேல்முறையீட்டாளர் சந்தை குழுத்ததால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மேல்முறையீடு எண் 18000/2011, 11.01.2013 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

6. மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்கறிஞர் முனைவர் நந்த கிஷோர், மற்றும் எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஹாரிஸ் பீரன் ஆகியோர்களின் வாதங்களை கேட்டோம்.

7. தரப்பினர்களுக்காக கற்றறிந்த வழக்கறிஞரின் வாதங்களைக் கேட்டபின், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் பதிவுறுக்களில் உள்ள ஆவணங்களை நாங்கள் பரிசீலித்தோம். இரு தரப்பினரின் வாதங்களை நாம் கையாள்வதற்கு முன், கர்நாடக வேளாண் விளைப்பொருள் சந்தைப்படுத்தல் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு) சட்டம் 1966-இன் தொடர்புடைய விதிமுறைகளை குறிப்பிடுவது பொருத்தமானது என்று நாங்கள் கருதுகிறோம். சட்டத்தின் பிரிவு 65 பின்வருமாறு கூறுகிறது:

"65. சந்தை கட்டணம் விதித்தல்:

(2) சந்தைக் குழு, சந்தைப் பகுதியில் ஒவ்வொரு வாங்குநர் வாங்கிய வேளாண் விளைப்பொருட்களுக்கும் சந்தை கட்டணம் விதித்து அந்த வாங்குநரிடமிருந்து அதை வசூலிக்கும், இது துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள விகிதங்களின்படி,

கால்நடைகளைத் தவிர மற்ற வேளாண் விளைப்பொருளுக்கு அதன் மதிப்பில் நூறு ரூபாய்க்கு இரண்டு ரூபாய்களுக்கு மிகாமலும், செம்மறி ஆடு அல்லது ஆடு அல்லாத கால்நடைகளுக்கு சந்தை கட்டணம் தலா ஐந்து ரூபாய்க்கு மிகாமலும், செம்மறி ஆடு அல்லது ஆட்டிற்கு அந்தக் கட்டணம் தலா ஒரு ரூபாய்க்கு மிகாமல், துணை சட்டங்களில் குறிப்பிட்டுள்ளவாறு குறிப்பிட்டுள்ள சமயங்களில் வசூலிக்கப்படும்:

இது தவிர, சந்தை வளாகத்திற்குள் ஏதேனும் கூட்டுறவு சங்கம் வேளாண் விளைப்பொருள் வியாபாரம் செய்தால், இந்த சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் சந்தைக்கட்டணத்தில் எண்பது சதவீதம் என்ற விகிதத்தில் சந்தைக்கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

மேலும் இது தவிர, ஏதேனும் ஒரு வேளாண் விளைப்பொருளுக்கு மாநிலத்தின் ஏதேனும் ஒரு சந்தை பகுதியில் உட்பிரிவு (2)இன் கீழ் சந்தை கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு, அந்த வேளாண் விளைப்பொருள் பதப்படுத்தப்பட்டு, மாநிலத்திற்குள் வேறு ஏதேனும் ஒரு சந்தைப்பகுதியில் விற்கப்பட்டாலோ அல்லது மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டாலோ, அதற்கு சந்தை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்படும்.

விளக்கம் - இந்த விலக்கக்கூறில் உள்ள எதுவும் கீழ்கண்டவைகளுக்குப் பொருந்தாது-

(i)மாநிலத்திற்கு வெளியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு சந்தை பகுதியிலும் விற்கப்படும் எந்தவொரு பதப்படுத்தப்பட்ட வேளாண் விளைப் பொருட்களும்; அல்லது

(ii)சுய நுகர்வுக்காக தவிர, பதப்படுத்துதல் அல்லது உற்பத்திக்காக, மாநிலத்திற்கு வெளியில் இருந்து மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு சந்தைப் பகுதியிலும், தனது சொந்த கணக்கில் அல்லது மற்றொரு நபரின் முகவராக, எந்தவொரு நபரும் இறக்குமதி செய்யும் அல்லது இறக்குமதி செய்ய வைக்கும் எந்தவொரு வேளாண் உற்பத்தி பொருளுக்கும்

மேலும், உரிமம் பெற்றவரால் நிறுவப்பட்ட நேரடி பரிவர்த்தனையில் வாங்குநர் அல்லது அறிவிக்கப்பட்ட விவசாயப் பொருட்களை நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கான உரிமம் பெற்றவர் அல்லது ஒப்பந்த வேளாண் உற்பத்தியாளரிடம் இருந்து வாங்கும் ஒப்பந்த வேளாண் முன்கொணர்பவர் பொறுத்தமட்டில் இந்த சட்டத்தின் கீழ் செலுத்தக்கூடிய சந்தை கட்டணத்தில் எழுபது சதவிகிதம் கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்ட வேண்டும்.

இது தவிர சட்டத்தின் பிரிவு 72-ஏ இன் கீழ் நிறுவப்பட்ட எந்தவொரு தனியார் சந்தைகளை பொருத்தமாட்டிலும், இந்த சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய சந்தை கட்டணத்தில் முப்பத்தி மூன்று சதவீதம் என்ற விகிதத்தில் சந்தை கட்டணம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும். பூக்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் மீது சந்தை கட்டணம் வசூலிக்கப்படாது. அதற்குப் பதிலாக, மேற்கூறிய பொருட்களுக்கு சந்தைக் குழுமம் பயனாளர் கட்டணங்களை வசூலிக்கலாம், சந்தை குழுமத்தால் வழங்கப்படும் சேவைகளுக்கு விளைப்பொருள்களை வாங்குபவர்களிடமிருந்து பெறப்படும் பயனாளர் கட்டணங்கள் வேளாண் விளைப்பொருட்கள் சந்தையின் இயக்குனரால்

அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில் இருக்க வேண்டும்.

(2-A) இந்த பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய சந்தைக்கட்டணம் கீழ்க்கண்டவாறு பெறப்படும்:-

(i) விளைப்பொருள் ஒரு தரகு முகவர் மூலம் விற்கப்பட்டால், தரகு முகவர் வாங்குநரிடமிருந்து சந்தை கட்டணத்தை பெற்று, அதை குழுமத்திற்கு செலுத்த வேண்டியிருக்கும்;

(ia) விளைப்பொருட்கள் ஒரு இறக்குமதியாளரால் வாங்குபவருக்கு விற்கப்பட்டால், இறக்குமதியாளர் சந்தைக் கட்டணத்தை வாங்குபவரிடம் இருந்து பெற்று, அதைக் குழுமத்திற்கு செலுத்த வேண்டியிருக்கும்;

(ii) உற்பத்தியாளரிடமிருந்து ஒரு வணிகரால் நேரடியாக விளைப்பொருட்கள் வாங்கப்பட்டால், வணிகர் சந்தைக் கட்டணத்தை குழுமத்திற்கு செலுத்தக் கடப்பாடுடையவர் ஆகிறார்;

(iii) விளைப்பொருள் ஒரு வணிகரால் மற்றொரு வணிகரிடம் இருந்து வாங்கப்பட்டால், விளைப்பொருட்களை விற்கும் வணிகர் அதை வாங்குபவரிடம் இருந்துப் பெற்று, குழுமத்திற்கு செலுத்தக் கடப்பாடுடையவர் ஆகிறார்;

(iv) அத்தகைய விளைப்பொருட்களை வேறு ஏதேனும் முறையில் விற்க நேர்ந்தால், வாங்குபவர் சந்தைக் கட்டணத்தை குழுமத்திற்கு செலுத்தக் கடப்பாடுடையவர் ஆகிறார்;

(2-B) உட்பிரிவு (2-A) இன் உட்பிரிவு (i), (ia), (ii) அல்லது (iii) இன் கீழ் செலுத்த வேண்டிய சந்தைக் கட்டணம் சந்தைக் குழுவிற்கு, துணை விதிகளில் குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தப்படும். "

8. மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் முனைவர் நந்த கிஷோர், சட்டத்தின் பிரிவு 65 இன் துணைப் பிரிவுகள் (2) மற்றும் (2-A) இன் படி, இறக்குமதியாளரால் மாநிலத்திற்கு வெளியே கொள்முதல் செய்யப்பட்டு சந்தை குழுமத்தின் பகுதிக்குள் பதப்படுத்தப்பட்ட பொருட்களாக விற்கப்படும் வேளாண் விளைப்பொருட்களுக்கு சந்தைக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று வாதிட்டார். மனுவின் வழக்குப் பொருளாக இருக்கும் வேளாண் விளைப்பொருட்கள், பட்டியலிடப்பட்ட பொருட்களாக இருப்பதால், பதப்படுத்தப்பட்டப்பின் அத்தகைய பதப்படுத்தப்பட்ட பொருட்கள் மீது சந்தை கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று பணிந்துரைக்கப்படுகின்றது. சட்டத்தின் 65-வது பிரிவின் படி, சந்தை பகுதியில் ஒவ்வொரு வாங்குநர் வாங்கும் விளைப்பொருளுக்கும் சந்தை குழுமம் வாங்குபவரிடமிருந்து துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சந்தை கட்டணத்தை விதித்து வசூலிக்கும். சட்டத்தின் 65 (2) பிரிவின் இரண்டாவது விலக்கக்கூறின் படி, வேளாண் விளைப்பொருள் மீது மாநிலத்தின் எந்தவொரு சந்தை பகுதியிலும் சந்தை கட்டணம் ஏற்கெனவே விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு, அந்த வேளாண் விளைப்பொருள் பதப்படுத்தப்பட்டு மாநிலத்திற்குள் உள்ள வேறு ஏதேனும் ஒரு சந்தைப்பகுதியில் விற்கப்பட்டால் அல்லது மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டால் சந்தை கட்டணத்தில் இருந்து விலக்கு அளிக்கப்படும் என்று

சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், விளக்கத்தின்படி, சுய நுகர்வுக்காக தவிர, பதப்படுத்துதல் அல்லது உற்பத்திக்காக, மாநிலத்திற்கு வெளியில் இருந்து மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு சந்தைப் பகுதியிலும், தனது சொந்த கணக்கில் அல்லது மற்றொரு நபரின் முகவராக, எந்தவொரு நபரும் இறக்குமதி செய்யும் அல்லது இறக்குமதி செய்ய வைக்கும் எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும் சந்தைக்கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

9. விளக்கத்தின்படி, சட்டத்தின் பிரிவு 65 (2) இன் இரண்டாவது விலக்குக்கூறின் கீழான விலக்கு, சுத்திகரிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சந்தை பகுதியில் விற்பனை செய்வதன் பேரில் இறக்குமதியாளர்களுக்கு பொருந்தாது என்று கூறப்படுகிறது. மேலும், சட்டத்தின் 65-வது பிரிவு (2-ஏ) கூறு (ஐஏ) பிரிவைக் கருத்தில் கொண்டு, இறக்குமதியாளர் தயாரிப்புகளை வாங்குபவருக்கு விற்றால், இறக்குமதியாளர் வாங்குபவரிடமிருந்து சந்தை கட்டணத்தை பெற்று அதையே குழுமத்திற்கு செலுத்த கடப்பாடுடையவராகிறார் என்றும் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட வகையங்கள் கற்றறிந்த தனி நீதிபதியால் பொருள்விளக்கப்பட்ட, அதை உயர்நீதிமன்றத்தின் நீதியராயம் உறுதி செய்ததும் பிழையானதாகும், அது பிரிவு 65 இன் வார்த்தைகளுக்கு முரணாக இருக்கிறது என்று பணிந்துரைக்கப்படுகிறது. ஜி. கிரிதர் பிரபு மற்றும் பலர் எதிராக வேளாண் விளைப்பொருள் சந்தைக் குழுமம் என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பை கற்றறிந்த வழக்கறிஞர் சார்வுற்றிருக்கிறார்[1].

---

1. (2001) 3 SCC 405

10. மாறாக, எதிர்மேல்முறையீட்டாளருக்காக முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் எதிர்மேல்முறையீட்டாளர் கர்நாடகா மாநிலத்திற்கு வெளியில் இருந்து வேளாண் விளைப்பொருட்களை வாங்கியுள்ளதால், அத்தகைய விளைப்பொருட்களை மேல்முறையீட்டாளரின் சந்தைப் பகுதியில் பதப்படுத்தி விற்பனை செய்யும் போது, அவர்கள் சந்தைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை என்று முனைப்புடன் வாதிட்டார். (22/2004 சட்டத்தின் மூலம்) சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட திருத்தங்களை குறிப்பிட்டு, சட்டத்தின் பிரிவு 65(2) தான் கட்டணம் விதிப்பதற்கான சட்டமாகும், அந்த வகையத்தை படிக்கும் போது எதிர்மேல்முறையீட்டாளர் இறக்குமதியாளராக கர்நாடகா மாநிலத்திற்கு வெளியில் இருந்து வேளாண் விளைப்பொருட்களை வாங்கி, அத்தகைய விளைப்பொருட்களை மேல்முறையீட்டாளரின் சந்தைப் பகுதியில் பதப்படுத்தி விற்பனை செய்யும் போது, அவர்கள் சந்தைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியதில்லை என்பது தெளிவாகிறது என்ற வாதம் முன்வைக்கப்பட்டது. அவரது வாதங்களுக்கு வலு சேர்க்கும் வகையில், கற்றறிந்த வழக்கறிஞர், குஜராத் அம்புஜா எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் மற்றும் ஒருவர் எதிர் உத்தரகண்ட் மாநிலம் மற்றும் பலர் [2] என்ற வழக்கின் தீர்ப்பையும், ஐடிசி லிமிடெட் எதிர் கர்நாடக மாநிலம் மற்றும் பலர்[3] என்ற வழக்கின் தீர்ப்பையும் சார்வுற்றிருந்தார்.

11. இந்த வழக்கில், எதிர்மேல்முறையீட்டாளர் சட்டத்தின் விதிகளின்படி வரையறுக்கப்பட்ட ஒரு வர்த்தகர் என்பதிலும், வேளாண் விளைப்பொருளாக அறிவிக்கப்பட்ட மசாலாப் பொருட்களை,

---

[2] (2016) 3 SCC 601

[3] 2005 SCC OnLine Kar 86 : 2005 AIHC 2950

கர்நாடக மாநிலத்திற்குள் உள்ள சந்தை பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல், கர்நாடக மாநிலத்திற்கு வெளியேயும் வாங்கியுள்ளார் என்பதிலும் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. இத்தகைய இறக்குமதியைத் தொடர்ந்து, அவர்கள் பொருட்களை பதப்படுத்தி, பதப்படுத்தப்பட்ட பொருட்களை சந்தை பகுதியில் விற்பனை செய்கிறார்கள். சட்டத்தின் கீழ் அட்டவணையின்படி பதப்படுத்தப்பட்ட பொருட்கள் கூட அறிவிக்கப்பட்ட பொருட்களாகும்.

12. கட்டணம் வசூலிப்பதற்கான பிரிவான சட்டத்தின் 65 வது பிரிவைப் படித்தால், சந்தைக் குழு ஒவ்வொரு வாங்குபவரிடமிருந்தும் சந்தைப் பகுதியில் அத்தகைய வாங்குபவர் வாங்கிய வேளாண் விளைப்பொருட்களுக்கு சந்தைக் கட்டணங்களை விதித்து வசூலிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. சட்டத்தின் பிரிவு 65(2)இன் இரண்டாவது வகையத்தின் படி, எந்தவொரு வேளாண் விளைப்பொருளின் மீதும் மாநிலத்தின் எந்தவொரு சந்தை பகுதியிலும் (2) உட்பிரிவின் கீழ் சந்தை கட்டணம் ஏற்கனவே விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டிருந்து, அத்தகைய வேளாண் விளைப்பொருள் மாநிலத்தின் எந்தவொரு சந்தை பகுதியிலும் பதப்படுத்தப்பட்டு விற்கப்பட்டால் அல்லது மாநிலத்திற்கு வெளியே ஏற்றுமதி செய்யப்பட்டால், அது சந்தை கட்டணத்தில் இருந்து விலக்கு பெறும். எனினும், விளக்கத்தை வாசிப்பதன் மூலம், இரண்டாவது விலக்குக்கூறின் பொருந்தக்கூடிய தன்மை மாநிலத்திற்கு வெளியே இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, பதப்படுத்தப்பட்டு, மாநிலத்திற்குள் எந்தவொரு சந்தை பகுதியிலும் விற்பனை செய்யப்படும் எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும்; சுய நுகர்வுக்காக தவிர, பதப்படுத்துதல் அல்லது உற்பத்திக்காக, மாநிலத்திற்கு வெளியில் இருந்து மாநிலத்திற்குள் உள்ள எந்தவொரு சந்தைப் பகுதியிலும், தனது சொந்த கணக்கில் அல்லது மற்றொரு நபரின் முகவராக, எந்தவொரு நபரும் இறக்குமதி செய்யப்படும் அல்லது இறக்குமதி செய்ய

வைக்கப்படும் எந்தவொரு வேளாண் விளைப்பொருளுக்கும் விலக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

13. ஜி. கிரிதர் பிரபு மற்றும் பலர்[1] வழக்கில், கர்நாடக வேளாண் விளைப்பொருள் சந்தைப்படுத்துதல் ஒழுங்குமுறை சட்டம் 1966-இன் வகையங்களை பொருள்விளக்கும்போது, முந்திரி கொட்டைகளை வாங்கி, பின்னர் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தையில் விற்பனை செய்வதற்காக உற்பத்தி செயல்முறை மூலம் முந்திரி கொட்டைகளிலிருந்து முந்திரி பருப்பை பிரித்தெடுக்கும் நபர், பிரிவு 48 இன் உட்பிரிவு (2) இன் வரையறையில் வர்த்தகர் அல்லது சட்டத்தின் பிரிவு 2(14-A)இன் கீழான வரையறையில் இறக்குமதி செய்பவராக கருதப்படுகிறார். எனவே, அவர் வாங்குபவர்களிடமிருந்து சந்தைக் கட்டணத்தை வசூலிக்கவும், அத்தகைய கட்டணங்களை சந்தைப்படுத்தல் குழுமத்திற்கு செலுத்தவும் கடப்பாடுடையவராகிறார் என்று இந்நீதிமன்றம் தீர்வளித்துள்ளது.

14. குஜராத் அம்புஜா எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட் மற்றும் ஒருவர் [2] என்ற வழக்கில், உத்தரகண்ட் வேளாண் விளைப்பொருள் சந்தைப்படுத்துதல் (மேம்பாடு மற்றும் ஒழுங்குமுறை) சட்டத்தின் வகையங்களை பரிசீலிக்கும்போது, சந்தைப் பகுதிக்கு விற்பனைக்கல்லாது உற்பத்திக்காகவோ அல்லது பதப்படுத்துதலுக்காகவோ கொண்டுவரப்பட்ட வேளாண் விளைப்பொருள்களை சந்தைக்கட்டணத்திற்கு உட்படுத்த முடியாது என்று இந்நீதிமன்றம் முடிவுரைத்தது. அதுப்போன்று, ஐடிசி லிமிடெட் என்ற வழக்கில்[3], கர்நாடக உயர்நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதி சந்தைப் பகுதிக்குள் இறக்குமதி செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்களை இருப்பு வைப்பது மற்றும் செயலாக்குவது கூட சந்தைக் கட்டணத்தை ஈர்க்காது.

15. மேற்கூறிய தீர்ப்புகளில் உள்ள கருத்தை நாங்கள் ஆதரிக்கிறோம், ஆனால் இந்த வழக்கில் எதிர்மேல்முறையீட்டாளர் சட்டத்தின் பிரிவு 65 (2) இன் உட்பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட வாங்குபவர், மேலும் சட்டத்தின் பிரிவு 65 (2) இன் இரண்டாவது விலக்குக்கூறு மற்றும் விளக்கத்தை நாங்கள் புறக்கணிக்க முடியாது. மேல்முறையீட்டாளரின் சந்தைப்பகுதிக்குள் இறக்குமதி செய்யப்பட்ட வேளாண் விளைப்பொருளை பதப்படுத்தியப்பின் எதிர்மேல்முறையீட்டாளர் விற்பதை மறுப்பது பற்றிய வழக்கு அல்ல. இதுபோன்ற பார்வையில், சந்தை கட்டணங்களை செலுத்துவதில் இருந்து விலக்கு பெற உரிமை இல்லை. அதே சமயம், ஒருவர் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்களை சுத்திக்கரித்து பதப்படுத்துவதற்காக மட்டும் மாநிலத்திற்கு வெளியிலிருந்து இறக்குமதி செய்து, அந்த பதப்படுத்தப்பட்ட வேளாண் விளைப்பொருளை சந்தைப்பகுதிக்குள் விற்பனை செய்யவில்லை என்றால் சந்தைக்கட்டணம் செலுத்தத் தேவை இல்லை என்பதையும் தெளிவுப்படுத்துகிறோம். இறக்குமதிக்கு பின் சந்தை பகுதியில் விற்பனை என்ற உண்மையை மறுக்காமல், இந்த வழக்கில், எதிர்மேல்முறையீட்டாளர், வேளாண் விளைப்பொருட்கள் பதப்படுத்தப்பட்டவுடன் சந்தை கட்டணத்தை ஈர்க்காது என்ற அடிப்படையில் மட்டுமே வழக்கைப் தொடர்ந்துள்ளது, இது ஏற்றுக்கொள்ள முடியாது. சந்தைப் பகுதிக்கு வெளியே செய்யப்பட்ட முதல் கொள்முதல் அல்ல, சந்தைப் பகுதிக்குள் செய்யப்படும் விற்பனைதான் சந்தைக் கட்டணத்தை ஈர்க்கிறது. குறிப்பாக, விற்பனை செய்யப்படும் பொருட்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கப்பட்ட வேளாண் விளைப்பொருட்களாகும். இந்த விளைப்பொருள் அட்டவணையில் சேர்க்கப்பட்டிருப்பது எதிர்க்கப்படவில்லை.

16. மேற்சொன்ன காரணங்களுக்காக, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. நீதிப்பேராணை மேல்முறையீடு எண் 18000/2011 இல் பிறப்பிக்கப்பட்ட 11.01.2013 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது. அதன் விளைவாக, நீதிப்பேராணை மனு எண் 11816/2009 தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகைப் பற்றிய உத்தரவு இல்லை.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."